**நெல் சந்தைப்படுத்தல் சபை - 2019**

------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக சபையின் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16** | | |
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இற்றைப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்புக்கள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால் மாற்றங்கள் எல்கேஏஎஸ் 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் பிழைகளின் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றமொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 7,097,050 கிரயமான சொத்துக்கள் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20** | | |
| இலங்கைக் கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் அரசாங்க மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து வருடாந்த பெறுமானத்தேய்விடப்பட்ட பெறுமதிக்கு சமமான தொகையொன்றை பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்பட்டு மூலதன மானியங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான அரசாங்க மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 74,204,650 ஆக காணப்பட்ட போதிலும் குறித்த தொகையை விஞ்சி பிற்போடப்பட்ட வருமானமொன்றாக ரூபா 143,119,242 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததால் வருமான செலவின கணக்கில் ஆண்டின் வருமானம் ரூபா 68,914,592 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் காணிகள் மற்றும் கட்டிடங்களை சுவீகரிப்பதற்காக காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 384,902 ஆக காணப்பட்ட போதிலும் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 100,516,292 ஆல் அதிகரித்து ரூபா 100,901,194 ஆக காட்டப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான மர தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 2,801,938 ஆக காணப்பட்ட போதிலும் இது காசப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,358,274 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 1,490,787 ஆக காணப்பட்ட போதிலும் இது காசப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 115,288 ஆல் அதிகரித்து ரூபா 1,606,075 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது, | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நடைமுறைவேலைகளின் போது காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 4,414,833 ஆக காணப்பட்ட போதிலும் இது காசப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 2,912,070 ஆல் அதிகரித்து ரூபா 7,326,903 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | நீண்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட தொங்கல் கணக்கின் ரூபா 3,049,830,238 மீதி மற்றும் 2018 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்ட ரூபா 2,234,953 ஒன்லைன் இருப்புக்கள் என்பவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | இது சரியாக கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பனை அபிவிருத்திச் சபையிடமிருந்தான ரூபா 700,000 மற்றும் உணவு ஆணையாளர் திணைக்களத்திலிருந்தான ரூபா 10,591,838 மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்திடமிருந்தான ரூபா 77,526,708 தொகைகள் செலுத்த வேண்டியவைகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்கள் அத்தகைய செலுத்த வேண்டியவைகள் எவையும் காணப்படவில்லை என எழுத்துமூலம் அறிவித்திருந்தன. எனினும் இவை நிதி நிலைமை கூற்றில் கடன்பட்டோராக குறிப்பிடப்பட்டிருந்தன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | வருடாந்த கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல் பெறப்பட்டு கணக்குகளை இணக்கம் செய்வதன் மூலம் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்தின் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்திடமிருந்து பெறவேண்டிய பெறுமதி ரூபா 1,070,666,192 ஆக காணப்பட்ட போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டியவைகளின் பெறுமதி ரூபா 321,523,910 ஆல் அதிகரித்து ரூபா 1,392,190,102 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கணக்குகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் காணப்பட வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புக்கள் சந்தை விலை மற்றும் அதன் கிரயத்தை விட குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. இதனால், அடுத்த பருவத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்கும், நெல்லை விற்பனை செய்வதன் மூலம் ஏற்படும் நட்டங்களை தீர்ப்பனவு செய்வதற்கும் தேவையான நிதிகளை திரட்டுவதற்காக வருடாந்தம் பொது திறைசேரி மற்றும் அரச வங்கிகளிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நெல் கொள்வனவிற்காக 03 அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களில், 2019 திசெம்பர் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சபையின் தொடர்ந்தியங்கும் தன்மையை நோக்கி கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 வரை திரண்ட செலுத்த வேண்டியவைகள் மற்றும் அவை தொடர்பான திரண்ட வட்டி என்பன முறையே ரூபா 18,104 மில்லியன் மற்றும் ரூபா 1,646 மில்லியன் ஆக காணப்பட்டன. | | |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய மூன்று ஆண்டுகளின் தேறிய சொத்துகளின் பெறுமதியை கருத்தில் கொள்ளும் போது ரூபா 12,060,577,822 ஆக இருந்த 2016 ஆம் ஆண்டின் எதிர்மறை பெறுமதி மீளாய்வாண்டில் ரூபா 14,179,929,345 எதிர்மறை பெறுமதி வரை அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 3,548,270,058 எதிர்மறை பெறுமதியொன்றாக காணப்பட்டது. இது சபையின் தொடர்ந்தியங்கும் தன்மையை மோசமாக பாதித்திருந்ததால் அரசாங்கத்தின் நிதி உதவியின்றி இந்த பொறுப்புகளை தீர்ப்பதற்கு சபை நிதி ரீதியாக பலப்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சபையின் தொடர்ந்தியங்கும் தன்மையை நோக்கி கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **கடன்பட்டோர் மீதி** | | | | |
| நெல் விற்பனை - அமைச்சு | 32,688,410 | | | |
| அரிசி ஏற்றுமதி - அமைச்சு | 264,154,465 | | | |
| வடக்கு - கடல் | 1,000,000 | | | |
| ஆலைகளிடமிருந்து (Millers) பெறவேண்டியவை | 65,501,226 | மீதி உறுதிப்படுத்தல் | | |
| அம்பாறை பி/செ இடமிருந்து பெறவேண்டியவை – WFP | 2,458,086 | | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கணக்கு உருப்படிகளின் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணச் சான்று பேணப்பட வேண்டும். |
| அம்பாந்தோட்டை பி/செ இடமிருந்து பெறவேண்டியவை – WFP | 18,351,743 | | | |
| அரிசி ஆலைகள் ஏற்றுமதி | 208,313,337 | விபரமான பட்டியல்கள் | | |
| அரிசி ஆலைகள் (கடன் அடிப்படையில் நெல் விற்பனை) | 44,399,804 | | | |
| அரிசி ஆலைகள் (CWE & WF – 2016) | 8,027,716 | | | |
| கொள்வனவு கட்டுப்பாட்டு கணக்கு | 49,743,530 | விபரமான பட்டியல்கள் | | |
| இனங்காணப்படாத நெல் கொள்வனவு | 70,818,163 | | | |
| தொங்கல் கணக்கு (நெல் கொள்வனவு) | 18,574,188 | | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கணக்கு உருப்படிகளின் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணச் சான்று பேணப்பட வேண்டும். |
| **காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேடு** | | | | |
| காணிகள் மற்றும் கட்டிடங்கள் | 2,203,388 | நீக்குதல் தொடர்பான விபரமான ஆவணங்கள் | | |
| காணிகள் மற்றும் கட்டிடங்களின் சீராக்கம் | 3,705,253 | விபரமான பட்டியல்கள் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணக்கிற்கு முற்பணங்களை மாற்றுதல் | 17,448,220 | பணிகளின் பூர்த்தி செய்தல் சான்றிதழ்கள் | | |
| G.A இற்கு செலுத்தப்பட்ட பணத்தை காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணக்கிற்கு மாற்றுதல் | 10,731,138 | பணிகளின் பூர்த்தி செய்தல் சான்றிதழ்கள், நிலையான சொத்துக்களின் விபரங்கள் | | |
| காணிகள் கட்டிடங்கள் கணக்கிற்கு மீதியாக பணத்தை வரவு வைத்தல் | 384,902 | நிலையான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் | | |
| நடைமுறை வேலை கணக்கிலிருந்து காணி கட்டிடக் கணக்கிற்கு மாற்றுதல் | 24,258,992 | நிலையான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள், பூர்த்திசெய்தல் தொடர்பாக பொறியியலாளரின் சான்றிதழ் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கணக்கு உருப்படிகளின் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணச் சான்று பேணப்பட வேண்டும். |
| G.A நிர்மாணங்களாக காணிகள் கட்டிடங்கள் கணக்கில் இருந்து நீக்குதல் | 1,341,833 | நீக்குதல் தொடர்பான விபரங்கள் | | |
| **நிலையான சொத்துக்கள் பதிவேடு**<br>----------------------- | | | | |
| நுகர்வுப் பொருட்கள் | 1,268,312 | விபரமான இருப்பு பதிவேடுகள் | | |
| நிலையான சொத்துக்களின் ஆரம்ப மீதி | 1,192,568,504 | தனித்தனியாக இனங்காணப்பட்டு பதிவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் நிலையான சொத்துக்கள் பதிவேடு | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கணக்கு உருப்படிகளின் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணச் சான்று பேணப்பட வேண்டும். |
| ஆண்டின் நிலையான சொத்து கொள்வனவு | 106,253,556 | | | |
| ஆண்டின் பெறுமானத்தேய்வு | 74,204,650 | விபரமான பட்டியல்கள் | | |

## 1.6 பெற வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,675,916,872 கடன்பட்டோர் மீதி 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,917,478,534, 03 மற்றும் 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 28,837,545 மற்றும் 01 மற்றும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 729,600,799 ஆன மீதிகளை உள்ளடக்கியிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 7,091,809,148 கடன்கொடுத்தோர் மீதி 04 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 6,717,087,405, 03 மற்றும் 04 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 6,581,534, 01 மற்றும் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 368,140,210 மற்றும் 01 ஆண்டிற்கு உட்பட்ட ரூபா 71,092,220 ஆன மீதிகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், இந்த மீதிகள் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,684,554,538 மீதியை உள்ளடக்கியிருந்ததுடன் அவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பழைய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டியின் 2.1.4.1 ஆம் வழிகாட்டல் - 2006 | ரூபா 100 மில்லியனிற்கு மேற்பட்ட பெறுகைகள் அமைச்சு நியமித்த பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் திணைக்களம் நியமித்த பெறுகைக் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழுவினால் ரூபா 102.9 மில்லியன் பெறுமதியான பொலி சாக்கு பைகளை (poly sack bags) கொள்வனவு செய்வதற்கான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | வருடாந்த அறிக்கைகள் உரிய காலப்பகுதியினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 741,663,275 நட்டமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,185,101,723 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 443,438,448 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் ரூபா 4,786,907 ஆல் அதிகரித்தமை மற்றும் நிதிச் செலவினம் ரூபா 387,846,642 ஆலும் ஏனைய செலவினம் ரூபா 10,757,046 ஆலும் குறைவடைந்தமை என்பன குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையால் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 4,132,994 கிலோகிராம் நெல் இருப்புப் பற்றாக்குறையில் 3,597,203 கிலோகிராம் நெல் இயற்கைச் சேதங்களுக்காக பதிவழிக்கப்பட்ட பின்னர் ரூபா 13,074,157 பெறுமதியான இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்பான 54 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். குறித்த மீதியில், ரூபா 6,106,113 தொகை சபையினால் அறவீடு | நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் போது 54 உத்தியோகத்தர்களிடமிருந்து இருப்பு பற்றாக்குறைகள் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2021 மார்ச் 29 அளவில் 16 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 6,833,300 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்பான நபர்களிடமிருந்து உரிய பெறுமதிகளை அறவீடு செய்வதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,968,078 பற்றாக்குறை பெறுமதி 2021 சனவரி 25 வரையிலும் 17 உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் அறவீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். அவ் உத்தியோகத்தர்களில் இருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து ரூபா 4,245,954 கூட்டுமொத்தமான பற்றாக்குறைகளை அறவீடு செய்வதற்கு சபையால் நாளதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் போது 16,068,715 கிலோகிராம் நெல் பற்றாக்குறை இனங்காணப்பட்டதுடன் குறித்த பற்றாக்குறை தொடர்பில் 125 உத்தியோகத்தர்கள் இருப்புப் பொறுப்பாளராக கடமையாற்றியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பு மெய்மையாய்வை மேற்கொண்ட பின்னர் கணக்காய்வு திகதி வரையிலும் ஏறக்குறைய 02½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் சபை உரிய பற்றாக்குறைகளை அறவீடு செய்திருக்கவில்லை. | அவ் உத்தியோகத்தர்களின் இருப்பு பற்றாக்குறைகள் தொடர்பாக தண்டப்பணங்களை கணிப்பீடு செய்து அதை பணிப்பாளர் சபைக்கு அனுப்புவதன் மூலம் அறவீடுகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய பற்றாக்குறையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் சிறுபோக பருவகாலத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை பொதி செய்வதற்கு தேவையான 2,000,000 பொலி சாக்கு பைகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகைகளை மேற்கொள்ளும் போது அப்போது வலய களஞ்சியங்களில் ஏற்கனவே இருந்த 860,776 எண்ணிக்கையான எஞ்சிய பொலி சாக்கு பைகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ரூபா 102,900,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 2,000,000 பொலி சாக்கு பைகளில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 1,482,606 பொலி சாக்கு பைகள் வலய களஞ்சியங்களில் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | தற்போதுள்ள இருப்புகளில் கவனம் செலுத்தி தேவைக்கேற்ப மாத்திரமே கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காணப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு மேலும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 42,016,643 ஆக காணப்பட்டது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய உணவு ஊக்குவிப்பு சபைக்கு 2019 மே 30 இல் விற்பனை செய்யப்பட்ட 11,210 கிலோகிராம் அரிசி உரிய விவரக்குறிப்புகளுடன் இணங்காததன் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த அரிசி இருப்பு சபைக்கு சொந்தமான மரந்தகஹமுல களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. களஞ்சியங்களில் உள்ள அரிசி தொடர்பான அறிக்கை 2019 மே 07 இல் உணவு ஆணையாளரால் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம் இந்த அரிசி இருப்பு மனித நுகர்வுக்கு பொருத்தமற்றது எனவும் இதனால் குறித்த இருப்பு கிரயம் ரூபா 837,450 நட்டமாக ஏற்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | அரிசியை களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் போது முறையான நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலும் அரிசி களஞ்சியப்படுத்தல் செயன்முறை பரிந்துரைக்கப்பட்ட விவரக்குறிப்புகளுடன் இணங்குகின்றதா என்பதை பரீட்சிப்பதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையால் அமுல்ப்படுத்தப்பட்ட அரிசி செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொலி சாக்கு பைகளில் ரூபா 1,401,735 பெறுமதியான 102,376 பொலி சாக்கு பைகள் குறித்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த தவறியதன் காரணமாக கணக்காய்வு திகதி வரையிலும் விளைவற்று இருந்தது. மேலும், அந்த பைகளில் விலை மற்றும் காலாவதி திகதிகளை அச்சிடுவதற்கு 02 barcode இயந்திரங்கள் மற்றும் அதற்குத் தேவையான ஏனைய உபகரணங்கள் ரூபா 93,063 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரங்களும் விளைவற்றிருந்தன. | குறித்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் பதவி விலகியிருந்ததுடன் அதனை தொடர்ந்து புதிய தலைவர் குறித்த செயற்திட்டத்தை முன்னெடுத்திருக்கவில்லை. | தேவைக்கேற்ப மாத்திரமே கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |